# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/22 - 2017 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා - 2017.07.25

*2029/22 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

வட மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்

*வட மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் கேட்டுவிலகியமை காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(1) ஆம் பிரிவின்கீழ் வட மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளாராதலாலும் ;*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின்கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர் குறிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பணிக்கப் பட்டுள்ளாராதலாலும் ;*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. இரத்தினலிங்கம் ஜெயசேகரன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, திரு. இரத்தினலிங்கம் ஜெயசேகரன் என்பவர், அத்தகைய வெற்றிடத்திற்கு மேற்குறித்த மாகாண சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

| | | | | |
|---|---|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய | - | தவிசாளர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு |
| என். ஜே. அபேசேகர | - | அங்கத்தவர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு |
| எஸ். இரத்னஜீவன் எச். ஹூல் | - | அங்கத்தவர் | - | தேர்தல்கள் ஆணைக்குழு. |

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2017, யூலை 25.*

*8-335*


1A G 25966 — 27 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*